ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சங்க காலத்து ஆடற்கலையின் சிறப்பு பற்றிய நோக்கு

முனைவர் அ. கிருபைராஜா
நடனத்துறை முதுநிலை விரிவுரையாளர்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை
Email: Arulchelvi.k@gmail.com

33

ஆய்வுச்சுருக்கம்

கலைகளில் ஆடற்கலை தனித்துவம் பெற்றது ஏனெனில் அதற்கு மொழி ஒரு தடை அல்ல மௌனமே அதன் மொழி சைகைகளே அதன் பரிபாசை அதில் ரசம் என்பது ஆடல் உணர்ச்சிகளில் வெளிப்படையாக தெய்வாம்சம் பொருந்தியது. அது உள்ளத்து உணர்ச்சிகளின் உந்துதலிலே மனம் பதிவு செய்தலை கரங்கள் துடிப்புடன வெளிப்படுத்துகின்றன. கரங்களின் துடிப்பை கண்ணுறும் நயனங்கள் கண் அசைவின் மூலம் அந்த உயரிய ரசத்தை வெளிப்படுத்துகின்றது. தாய்மொழியில் ஆடல் எனும் சொல் பாடல்(பா+ஆடல்) எனும் சொல்லுக்குள் அடக்கம் இதில் பா என்பது பாடலுக்கு உதவும் பண்ணிசைப்பா ஒன்றையொன்று சார்ந்த இவ்விரு கலைகளும் ஆரம்பத்தில் தெய்வழிபாட்டுடன் ஆரம்பித்தன. பின்னர் அரசவை கூடும் அச்சாணி மண்டபங்கள் ஆடல் அரங்கேறும் மேடைகளாக மாறிவிட்டன.

கலைகள் அனைத்திற்கும் மாறுபட்ட வடிவங்களுக்கு விளக்கங்கள் உண்டு என்பதை வரலாற்று பதிவுகள் நன்கு உணர்த்துகின்றன. அதில் இலக்கியம் வகுத்து தந்த வழியில் வெற்றி நடைபோட்டு பாரம்பரிய கலைகளும் அதன் வழிகாட்டலிலே உருவாகி உள்ளன. அந்த வகையில் தமிழ் அரசியல், மற்றும் இலக்கியதில் பொற்காலம் எனப் போற்றப்படுவது கி.பி. முதல் மூன்று நூற்றாண்டு காலத்தில் நிலவிய சங்க காலமே. அன்னை மீனாட்சி அருள் பெற்ற மதுரை மாநகரத்தை தலைநகராக கொண்டு நீதி வழுவா ஆட்ச்சி செலுத்திய பாண்டிய மன்னர்களின் அரவணைப்பில் உயர்தனி செம்மொழியாம் தமிழ்மொழி வளரவும், ஆடற்கலைகள் செழித்தோங்கவும், அதன் சிறப்புக்களையும் எடுத்துக்காட்டுவதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமையப்பெறுகிறது.

திறவுச்சொற்கள்: சங்ககாலத்து ஆடல், தமிழ் ஆடல்

ஆய்வின் நோக்கம்

சங்ககால ஆடல்கள் சமய, உலகியல் சார்புள்ளனவாகவும் நிலவி வந்துள்ளன. இன்பம் அளிக்கும் அழகியற் கலைகளாகவும் பொழுது போக்கு, சடங்கு, இறை வழிபாடு, முதலியவற்றிற்கான சாதனங்களாகவும் ஆடற்கலை எவ்வாறு சிறப்பு பெற்றுள்ளன என்பதை கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

முன்னுரை

சங்க காலத்தில் வேலன் வெறியாடல், குரவைக் கூத்து முதலியவற்றிலிருந்து தோன்றி வேத்தியல், பொதுவியல் என்னும் இரு வழிகளில் வளர்ந்து இன்றைய பரதத்தை அடைந்துள்ளது.

பேச்சு, எழுத்துக்கு முன்பே தனது கருத்தை கூறுவதற்கு மனிதன் பயன்படுத்தியது 'ஊமைப்பேச்சு' வகை அபிநயமே இக்கலையே பின்னர் ஆடற்கலையாக வளர்ந்தது. மொழி தோன்றிய பின்னர் இனக்குழுவாக வாழ்ந்த பழந்தமிழன், தன் வழிபாட்டிலும், போர் நிகழ்ச்சிகளிலும், ஆடிய கூத்துகளை சங்க இலக்கியங்கள்; தெளிவான வரையறையைத் தருகின்றன. அவை பின்வரும் கட்டமைப்புக்களாக விளக்கப்படுகின்றன. இக்கட்டமைப்பை தெரிந்து கொள்வதன் மூலம் ஆடற்கலையின் சிறப்பினை அறிந்து கொள்ள இவ் ஆய்வுக்கட்டுரை பயன்பாடுடையதாக காணப்படும் என நம்பப்படுகின்றது.

தோற்றம்

நம்பிக்கைகள், சடங்குகள் என்பனவற்றின் அடிப்படையில் தோன்றிய ஆடல் சங்க காலத்தில் வேலன் எனப்படும்; என்கிறது அகத்தினை மரபு. பூசாரியும் முருகக்கடவுளின் பெயரை உச்சரித்து மந்திரம் சொல்லி ஆட்டை பலி கொடுத்து வெறியாடல் ஆடுகின்றான். இதனால் இது வேலன் ஆட்டம் எனவும் அழைக்கப்படுகின்றது. பண்டைய ஆடல் வகைகளில் குரவைஆடல் கூத்து முக்கியமானது. மாடு வளர்க்கும் ஆயர்கள் தமக்கு வர இருக்கும் துன்பத்தை நீக்க வேண்டுமென தம் குல தெய்வமான மாயோனை வேண்டி ஆடுவார்கள். அவர்கள் வாழ்வில் கெட்ட சகுனமாக கருதுவது பசுக்கள் நடுங்குவது, பசுவின் கழுத்தில் கட்டிய மணி தானே அறுந்து விழுதல், உறியில் இருந்து இறக்கிய வெண்ணைய் உருகாமல் இருப்பது போன்றவை கண்டு ஆடப்படும். இது போலவே வேட்டுவகுல மக்கள் தமக்கு வேட்டை கிடைக்காத போது "ஐயை" எனும் குல தெய்வத்தின் கோபமே காரணமெனக் கருதுவர். இதைப்போக்குவதற்காக இளம் பெண் ஒருத்தியை 'ஐயைப்' போல் அலங்கரித்து புலித்தோலாடையும், புலிப்பல்தாலியும், பன்றியின் கொம்பினால் ஆன பிறையும் அணிவித்து அவளை ஊர்வலமாக அழைத்துச் சென்று ஐயையின் கோயில் முன்னால் ஆடுவர். இது “வேட்டுவ வரி” எனப்படும்.

துணங்கைக் கூத்து ஆட்டம் முடக்கிய இரு கைகளையும், விலாப்புடைகளில் ஒற்றியடித்துக் கொண்டு அசைந்தாடும் ஒரு வகைக் கூத்து. போர்க்களத்தில் இறந்து கிடக்கும் சடலங்களின் மத்தியில் இவ்வாடல் நடைபெற்றதாம். பிணம் தின்னும் பேய் மகளிர், போர்களத்துப் பிணங்களைத் தின்று மகிழ்ச்சியினால் ஆடுவதாக நம்பிய மக்கள், தாமும் அதுபோல ஆடினால், பகைவரை வெல்லலாம் எனக் கருதினர். இத்தகைய பண்டைய நம்பிக்கை ஒன்றின்

வழியாகவே இவ்வாடல்கள் தோற்றம் பெற்றன.

இலக்கியம்

பத்துப்பாட்டில் ஒன்றான "மலைபடுகடாம்" அல்லது 'கூத்தராற்றுப்படை' கூத்தரை ஆற்றுப்படுத்தும் நூலாக மிளிர்கிறது. அதுபோலவே பொருநராற்றுப்படையும் குறிப்பிடற்பாலது. கூத்தரும் பொருநரும் ஆடல், பாடல்களில் நன்கு ஈடுபட்டனர். சங்க நூல்களிலே மலைபடுகடாமும், பொருநராற்றுப்படையும் ஆடலையும் பாடலையும் தொழிலாகக் கொண்டோரின் திறனை எடுத்துக்கூறுவன. இயற்கையோடு மக்கள் ஒன்றி வாழ்ந்த காலம் சங்ககாலம். இங்கு 'கூத்து' என்ற தூய தமிழ்ச் சொல்லால் அழைக்கப்பட்ட ஆடல் வடிவமானது பதினெண் மேற்கணக்கு நூல்கள் என்ற தொகுதியில் அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் ஆகிய எட்டுத்தொகை நுல்களிலும்;, திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுப்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, முல்லைப்பாட்டு. மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை. மலைபடுகடாம் எனப்படும். கூத்தராற்றுப்படை ஆகிய பத்துப்பாட்டு நுல்களிலும்;, இலக்கண நூலாம் தொல்காப்பியத்திலும் அதன் சிறப்பு பற்றிய குறிப்புக்களை எமக்கு தருகின்றன.

ஆடல்வகை

சங்ககாலத்திலே நடனம் கூத்து, ஆடல், குனிப்பு என அழைக்கப்பட்டது. குரவைக்கூத்து எப்படி ஆடப்பட்டது என்பதை அடியார்க்கு நல்லார் விளக்கியுள்ளார். “எழுவர் மங்கையர் செந்நிலை மண்டலக் கடகக் கைக் கோத்து அந்நிலைக் கொப்ப நின்று ஆடும்” (சில, அடி, 219) கூத்தாகும். பெண்கள் வட்டமாக நின்று கை கோர்த்துக் கொண்டு ஆடும் வழக்கத்தை இன்றும் கூட பழங்குடி நடனங்களில் காணலாம். குறிஞ்சி நிலத்தில் குறப் பெண்கள் தங்கள் குறிஞ்சி நிலக் கிழவனாகிய முருகப்பெருமானை வழிபட்டு ஆடும் கூத்து 'குன்றக் குறவை' எனப்படுகிறது. இதுவே முல்லை நில மக்களால் மாயோனை திருமால்த் துதித்து ஆடப்படுமானால் அது 'ஆய்ச்சியர்குரவை' எனவும் கூறப்படுகிறது. நெய்தல் நில பரதவர்களும், மருத நில உழவர்களும் 'குரவைக் கூத்தாடியதை மதுரைக் காஞ்சியும் பதிற்றுப்பத்தும் தெரிவிக்கின்றன.

போரில் வென்ற வீரர் தம் அடையாளப் பூவைச் சூடி ஆடும் கூத்து 'கருங்கூத்து'.

வெற்றியைப் பாராட்டிப் பெண்கள் ஆடும் கூத்து “வள்ளிக் கூத்து'.

களத்தை விட்டு ஓடாத இளைய வீரனுக்குக் காலில் கழலைக் கட்டி, இருபாலரும் ஆடும் கூத்து 'கழனிலைக் கூத்து'

வெற்றி பெற வேண்டும் என ஆடும் கூத்து 'துணங்கைக் கூத்து' ஆகும்.
வள்ளிக்கூத்து முருகனின் நாயகியான வள்ளியாக ஒருவர் ஆடுவது. களநிலைக் கூத்து, போரிலே தொடர்ந்து போர்புரியும் போர் வீரருக்கான ஆடல், என இருவகைக் கூத்துக்களைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. தனிக்கலைஞர் ஆடல்களும், குழுவினர் ஆடல்களும் இடம்பெற்றன. இவற்றுள் குரவை, மருத நிலத்திலே பரவலாகவும், குறிஞ்சி, முல்லை, நெய்தல் நிலங்களிலும் இடம்பெற்றன. வெறிக்குரவை போர்வீரர் மத்தியில் பொதுவாக இடம்பெற்றது. துணங்கை கிராமத்தில் உள்ள பொது இடத்தில் ஆண்களாலும் பெண்களாலும் ஆடப்பட்டது. இத்துடன் போர்க்களத்துடன் தொடர்பான துணங்கையுமிடம் பெற்றது. விழாக்காலங்களிலும் பிற நேரங்களிலும் மலை வாழுநர் மனைவியருடன் மகிழ்ச்சிகரமாக ஆடினர் (மலை. 1-13). விறலியர் என்னும் ஆடல் மகளிர் தனிப்பட்ட வகையிலே கணவருடன் ஆடினர். அரச அவையிலும் ஆடல் மகளிர் இருந்தனர். கரிகாலன் காலத்திலே அவர்களிருந்தமை பற்றிப் பொருநராற்றுப் படை கூறுகின்றது. (108 - 110).
சங்ககால நடனங்களைப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் நான்கு வகையாக வகுத்துக் கூறியுள்ளார். அவையாவன,
நாட்டுக்கூத்து - இவ்வகையிலே வள்ளிக்கூத்து, குரவைக் கூத்து, கயிற்று நடனம் முதலியவை அடங்கும். பின்னையது ஆடல் மகளிர் உடற்பயிற்சி வித்தைகளில் ஒன்றாகும்.
சமயச் சடங்குக்குரிய ஆடல் - இவ்வகையிலே குறிப்பாக முருக வழிபாட்டுடன் தொடர்புடைய வேலன் வெறியாட்டு முதலியன அடங்கும்.
பேய் ஆடல் - இவ்வகையிலே வீரர் இறந்த இடங்களில் பேய் மகளிர் ஆடும் ஒருவகைத் துணங்கைக்கூத்து முதலியன குறிப்பிடற்பாலன.
போர்க்கள ஆடல் - போரிலே வெற்றிபெற்றதற்காக ஆடப்படும் இக்கூத்து சங்ககாலத்திற்குச் சிறப்பான ஒன்றாகும்.
போர்க்களத்தில் துணங்கை, குரவை முதலியன ஆடப்பட்டன எனவும் கூறப்படுகிறது. குரவை, நுணங்கை, வெறியாடல், விறலியாடல், வள்ளிக்கூத்து, வாடாவள்ளி, வாள் அமலைக்கூத்து, துடியாடல், கயிறாடல், பாவையாடல், அருவியாடல், குட்டத்து பாய்ந்தாடல், கோடியர்கூத்து, கழல்நிலைக்கூத்து, வெறிக்கூத்து. ஆரியக்கூத்து, கழைக்கூத்து, குடக்கூத்து, மற்றும் கொடுகொட்டி பற்றிய செய்திகளையும் தந்துள்ளன.

'தேரோர் வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்
ஒன்றிய மரபிற் பின் தேர்க் குரவையும்” (தொல், பொரு, 85)

என்ற அடிகளில் குரவைக் கூத்தினை இருவகையாகவும் அதில் வெற்றி பெற்ற

வேந்தன் வெற்றிக் களைப்பில் தேர்த்தட்டில் நின்று தம் வீரர்களோடு கைகோர்த்து ஆடுவது முன் தேர்க் குரவை என்றும், வென்ற வேந்தனின் தேரின் பின்னால் அவனது மறவரும், மகளிரும் புகழ்ந்து பாடியாடுவது பின் தேர்க்குரவையென்றும் குறிப்பிடுகிறார். இது வேகமான தாள கதியுடன் ஆரவாரமாக ஆடும் ஆடலாக இருப்பதோடு, மன்னனின் வீரம், புகழ் என்பன சொல்லியாடப்படும் ஆடலாகவும் உள்ளது.

நடனமாதார்

குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் முதலிய நான்கு நிலங்களிலும் அந்தந்த நிலத்திற்குரிய கூத்தர் இருந்து வந்தனர். யாழிசைத்துப் பாடும் பாணனின் மனைவி பாடினியை விறலி என்றனர். இவ்விறலியர் பாணர் கூத்தர்களுடன் சென்று அரசர், வள்ளல்கள் முன் ஆடி பரிசு பெற்றுச் செல்வது வழக்கம். இவ்வழக்கை குறுந்தொகை 'ஆடுமகள்" என்கிறது. விறலியர் அதிகம் இருந்த ஊரே ‘விராலிமலை' விறலியை கூத்தி, ஆடுமகள், ஆடுகள் மகள் என அழைக்கப்பட்டது போலவே கூத்தனையும் ஆடுமகன், ஆடுகள் மகன் எனவும் அழைத்தனர். இது தவிர புகழ்க்கூத்து, வசைக்கூத்து, வள்ளிக்கூத்து, சாந்திக் கூத்து முதலியவை இருந்ததைக் தொல்காப்பியம் சுட்டிக் காட்டுகிறது. இக்கூத்தர்கள் ஆடிய களம் 'ஆடுகளம்.' எனப்பட்டது. விழாக்காலங்களில் கூத்தர்கள் ஆடினார்கள். மற்ற காலங்களில் அரசர், வள்ளல்களை நாடி ஆடி பரிசில் பெற்றனர். ஏன்கின்ற குறிப்புக்களும் காணப்படுகின்றன.

நாடகத்திற்குத் தமிழில் “கூத்து” என்ற பெயரும் உண்டு. இசைக் கலையோடு இணைந்து வளர்ந்த கலை கூத்து. பண்டைக் காலத்தில் விழாக்களின் போது கூத்தர்கள் மக்களைத் தம் ஆடல், பாடல்களால் மகிழ்வித்தனர். பரதவர், குறவர் போன்ற மக்கள் பொழுது போக்காகப் பாடியும், ஆடியும் மகிழ்ந்தனர். இவர்களைத் தவிர இக்கலையைத் தம் பிழைப்பாகக் கொண்ட தனி இனத்தவரும் இருந்தனர். சங்க காலத்தில் எல்லாத்துறைகளிலும் ஆடலும், பாடலும் விரவி இருந்தன. அந்த காலத்தில் ஆடப்பட்ட ஆடல்களில் "வள்ளிக்கூத்து” பெருமை கொண்டிருந்தது. நாட்டுக்கு வெற்றியும் வளமும் கொணர்ந்த வள்ளியின் பெருமைகளைக் கருப்பொருளாகக் கொண்டதாகும். தொல்காப்பியர் இதனை 'வாடாவள்ளி' என்பர்.

"வாடா வள்ளியின் வளம்பல தரும் நாடுபல கழிந்த பின்றை" பெரும்பாண் (370-371)

என வாடா வள்ளியினால் வளம் தருமம் பல நாடுகளைப் பற்றிப் பெரும் பாணாற்றுப்படை கூறுகிறது. ஆடுவோர் கூத்தர், கோடியர், வயிரியர், கண்ணுலர், விறலியர் என அழைக்கப் பட்டனர்.

அகநானூற்றிலே ஓர் இயற்கை நிகழ்வான ஆடல் உருவகம் மூலம்

தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றது. மூங்கில் துளையிலே காற்றினாலேற்படும் ஒலி புல்லாங்குழல் இசையாகவும், குளிர்ச்சியான அருவியின் ஒலி முழவிசையாகவும், கலை மான்களின் ஒலி பெரிய வங்கிய இசையாகவும், மலர்களில் மொய்க்கும் வண்டுகளின் ரீங்காரம் யாழிசையாகவும் இசைக்கத் தோகையினை விரித்து அழகாக ஆடும் மயில்போல விறலி ஆடுகளம் புகுந்தாடினாள் எனக் கூறப்பட்டிருப்பது கவனித்தற்பாலது. இது அக்கால ஆடல்மகளிர்; பற்றிய முக்கியமான ஒரு குறிப்பு எனலாம். ஆடல்புரியும் மகளிர் விறலியர் என்று குறிப்பிடுவதுடன் விறலியாடல், விறலியாற்றுப்படை போன்ற பதங்கள் தாராளமாக நிலவியுன்னன.

ஒப்பனை

ஆடற்கலைஞரின் அழகிய தோற்றம், உறுப்புக்கள், அணிகள் முதலியன பற்றிய குறிப்புக்கள் சங்க நூல்களில் உள்ளன. திருமுருகாற்றுப்படையிலே குரவை பற்றி

"கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோடன் குறும் பல்லியத்தன்
நகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடிய நெடியன் நொடியணி தோள
மருகிற் கட்டிய நில நேர்பு துகிலின்
முளவுறத் தடக்கையினியல வேந்தி
மென்றோட் பல்பிணை தழீத் தலைந்து.
குன்றுதொறாடலு நின்றதன் பண்பேயதா அன்று" (திருமுரு 208-17)

என்ற பாடல் கச்சைகட்டி, கழலினை அணிந்து, கண்ணியைச் சூடி, குழலை ஊதி, கோட்டைக் குறித்துப், பல்லியங்களை இசைத்து, தகரைப் பின்னிட்டு, மயிலில் ஏறி, சேவற்கொடியொடு உயர்ந்த தோளிற் கொடியை அணிந்து துகிலை உடுத்து ஏந்தித் தழீஇத் தலக்கை கொடுத்து குன்று தோறும் ஆடும் அளவிற்கு என்றவாறு ஆடை, அலங்காரம், என்பவற்றுடன் ஆடியதாகவும் சொல்லப்படுகின்றது.

அரங்கு

காவிரிப்பூம்பட்டினத்திலே வாழ்ந்த மக்கள் ஆடலைப் பார்ப்பதற்கும் இசையின்பத்தை அனுபவிப்பதற்குமாக அந்நகரத்திலிருந்த பொது விடத்திற்கு அடிக்கடி சென்றனர் எனப் பட்டினப்பாலை (வரி 113) கூறுகின்றது. நடனங்கள் அரங்கு, தெரு, மணலுள்ள இடம், மலை, வீட்டின் முன்பக்கம் முதலியனவற்றிலே இடம்பெற்றன. ஆடுகளம் பற்றிப் புறநானூறு குறிப்பிடுகிறது.

புறநானூற்றில் "வேங்கை நிழற்குரவையயரும்" என்பதில் வேங்கை மரநிழலிலும், நற்றிணையில் "வேங்கை முன்றிற் குரவை கண்டே" என்பதில்

KAMARAJ COLLEGE
Accredited with A+ Grade by NAAC
இந்து சமுதாய நலச்சங்கங்களால் 1966-ல் தொடங்கப்பட்ட கல்லூரி
(Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli)
THOOTHUKUDI - 628003

வேங்கைமர முற்றத்தில் ஆடியயதாகவும், புறத்திணையில் மட்டுமன்றி அகத்திணை மரபிலும் இது ஆடப்பட்டுள்ளது. சேரி தோறும் மகளிர் தம்முட் கைகோர்த்து ஆடிய குரவைக்கூத்து கிராமங்களில் கைகளைக் கோர்த்துப் பெண்கள் இதனை ஆடியமையையும், கூத்தராற்றுப்படையில்

"நறவு நாட் செய்த குறவர்தம் பெண்டிரொடு
மான் றோற் சிறுபறை கறங்கக்கல்லென
'வான்றோய் மீமிசை யயருங் குரவை" (கூத்த 328-23)

என்ற பாடல் குறமக்கட் குழுவினர் பகற்காலத்தே கள்ளையுண்டு தம் மனைவியரோடு மான் தோலாலான சிறுபறை முழங்க வானத்தை முட்டும் மலை முகடுகளில் ஆடியதான செய்திகள் குறிப்பிடப்படுகின்றன. இங்கு இருபாலரும் பங்குகொள்வது குறிப்பிடத்தக்கது.

கௌரவிப்புக்கள்

கலைஞர்களை மன்னர்கள் நன்கு ஆதரித்தனர். அவர்களுக்கு வழங்கப் பட்ட கொடைகளில் நேர்த்தியான தேர்கள், குதிரைகள், அலங்கரிக்கப்பட்ட யானைகள், செழிப்பான நிலங்கள், விலையுயர்ந்த வேறு சில பொருட்கள் முதலியன அடங்கும். சில பாணர்களுக்குப் பொற்றாமரையும், பாடினி அல்லது விறலியருக்கு வெள்ளிக்கயிற்றாலே கோர்க்கப்பட்ட பொற்காசுகள் கொண்ட சங்கிலிகளும் வழங்கப்பட்டன. கரிகாலன் போன்ற மன்னர் கலைஞர்களை நன்கு வரவேற்று, உபசரித்து, கொடை வழங்கி விடையனுப்பி வந்ததை அறியலாம்.

கூத்தாடுவோரை மன்னர்கள் வெகுமதியளித்து மரியாதை செய்தனர் என்பதை "கூத்தர் பரிசு பெறுகுவை வானுதல் விறலி" (புறநானுறு 5)

"ஒளிதிகழ் முத்தம் விறலியாக்கு ஈத்து..." (புறநானுறு 7) போன்ற புறநானூற்றுப் பாடலடிகள் மூலமும், மன்னன் நலங்கிள்ளி நாட்டியம் பயின்ற உறையூர்ச் சாத்தனாரைப் பாதுகாத்தமையையும்

"ஆடுசிறை யறுத்த நரம்புசேர் இன்குரல்
பாடு விறலியர் பல்பிடி பெறுக" (பதிற் 43:21)

என்ற பதிற்றுப் பத்து வரிகளில் விறலி பல யானைகளைப் பரிசாகப் பெறுவதையும்,

"விறலியர் வறுங்கைக் குறுந்கொடி திறப்பப்
பாண ருவப்பக் களிறுபல தரீஇக்' (மதுரை 218-19)

என்ற மதுரைக் காஞ்சிச் செய்யுளில் விறலி அணிகலனும், பாணன் பலயானைகளைப் பரிசாகப் பெறுபவதாகவும், கூத்தராற்றுப் படையில்

"டலைவன்றாமரை மலைய விறலியர்
சீர்கெழு சிறப்பின் விளங்கிழை யணிய" தலைவன் பொற்றாமரையும், விறலி

அணிகலன்களைப் பெற்ற செய்தியும்,

நாடும் குன்றும் மொருங்கீ யும்மே” (புறநானூறு 109:15) விறலி போலவும், கூத்தர் போலவும் மாறுவேடம் பூண்டுவந்து ஆடினால், பாடினால் தன் நாட்டையும் பாரி கொடுப்பான் என்று கபிலர் ஆற்றுப்படுத்துவதும்,

".புகழுநர்க்கு கரசுமுழுதுங் கொடுப்பினு” (கூத்த 73)

என்ற கூத்தராற்றுப்படை சூதர், காதர், பாணர், கூத்தர் முதலியோருக்கு தான் வெற்றிகொண்ட பகையரசரது அரசினை முற்று முழுதாகக் கொடுக்கும் மன்னன் என்றவாறும், சங்ககாலத்தில் யானைகளையும், பெண் கலைஞர்களுக்கு ஆபரணங்களும், ஆண்கலைஞர்களுக்கு பொற்றாமரை சூட்டுவதும் வழக்கமாக இருந்தது. இவ்வாறாக ஆடற்கலைஞ்ஞர்களை கௌரவித்துள்ளார்கள்.

முடிவுரை

சங்ககாலத்தில்; கூத்தின் சிறப்பு பற்றி நோக்கும் போது அங்கு வழிபாடு, அதற்கு கொடுக்கப்பட்ட சிறப்பு ஆடல், அடல்மகளிர், ஒப்பனை, அரங்கு, கௌரவிப்பு போன்றவகை குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மேலும், நாடகத்திலே கூத்தும் ஒரு பகுதியாக விளங்கியமையும், நாடகம் கூத்தாகவும் ஆடப்பட்டு வந்தமையும் கவனித்தற்பாலன. எனவே ஆடலும் இசையும் தமிழர்களின் முதுசொத்துக்களாகத் தொன்றுதொட்டு விளங்கி வந்துள்ள கலைகளே. ஆகவே ஆடற்கலை மற்றும் அவை குறித்த சிறப்புக்களை குன்றின் மேல் இட்ட விளக்காய் ஒளிரச்செய்யும் சங்ககால வரலாற்று முக்கியத்துவம் பெற்றது என்பதில் வியப்பு எதும் இல்லை.

உசாத்துணை நூல்கள்

பார் போற்றும் பெண்ணூலகு
கலாஞீதர். த. முனைவர்
கற்பகம். செ. முனைவர்
தீபா. பி. முனைவர்
2018
அனன்யா பதிப்பகம், தஞ்சாவூர், இந்தியா.

தஞ்சை வளர்த்த பரதக்கலை
கலாராணி ரா. முனைவர்
2004
ஜெ. ஜெ. பதிப்பகம், மதுரை, இந்தியா.

பரதக்கலை சிவசாமி . வி. பேராசிரியர்
2013
பூபாலசிங்கம் புத்தகசாலை

கொழும்பு, இலங்கை.
தென்னாசிய சாஸ்திரீய நடனங்கள் ஒரு வரலாற்று நோக்கு
சிவசாமி வி. பேராசிரியர்
1998
யாழ்ப்பாணம், இலங்கை.
இந்து நாகரிகத்திற் கலை
சுந்தரம்பிள்ளை செ. காரை. குலாநிதி
1994
பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம், இலங்கை.
நாட்டியக் கலை
சுபாஷினி பத்மநாதன்
1993
விமலோதயா, தெகிவளை, இலங்கை.
கற்போம் பரதம்
நமசிவாயம் பாலா. திருமதி
;2009
மணிவாசகர் பதிப்பகம், சென்னை, இந்தியா.